Registered No. M. 878

157

ॐ

सत्यात् नास्ति परो धर्मः

பூர்ணசந்திரோதயம்.

A Tamil Monthly Journal

Devoted to Theosophy, Religion, Science, Art and Civilization.

தொகுதி 5. } 1914 ௵ செப்டம்பர் ௴ 15௳
ஆநந்த௵ ஆவணி ௴ 30௳ { பகுதி 5

அ. ரங்கஸ்வாமி ஐயர், B. A., B. L., F. T. S., பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை:

விவேகபாநு அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

158

பொருளடக்கம்.

(CONTENTS)

பக்கம்

1. தற்கால நிலைமை—அ. ரங்கஸ்வாமி ஐயர் 161
From the Editor—A. Rangaswami Iyer

2. வேதாங்கங்கள்—ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர். 168
Vedangas—R. S. Narayanaswamy Iyer

3. ரிஷிகள் அல்லது மஹாத்மாக்கள்—அ. ரங்கஸ்வாமி ஐயர். 174
Rshis or Masters—A. Rangaswamy Iyer

4. பிரஹ்மஞானமும் நாடகமும்—R.S.R. சுப்பிரமணியன் 183
Theosophy & Dramatic Art—B. S. R. Subramanian

5. என் குருநாதன் என்னை ஏன் ஏற்றுக் கொள்ளக்கூடாது? 189
ஆத்தங்குடி M. ஸ்வாமிநாதையர்.
Why not I?—Attangudi M. Swaminathier

6. அவதாரங்கள்—கே. கோடீசுவர ஐயர் 194
Avatars—K. KotiswaraIyer

7. சமாசாரங்கள். 198
News

Do you like to make your home happy ?

If so,

Please subscribe

Female Education

It educates

It enlightens

Subscription Rs 2—8—0 per annum

If you have not seen before,send one anna for sample cpoy.

Manager,

'FEMALE EDUCATION'

Madras E.

159

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 5. | 1914 ஸு செப்டம்பர்மீ 15உ ஆநந்தஸு ஆவணி மீ 30உ | பகுதி 5

தற்கால நிலைமை.

ஐரோப்பாக் கண்டத்தில் பிரதானதேசங்களுக்குள் அதிகோரமான யுத்தம் ஆரம்பித்துவிட்டது. இங்கிலாந்து, பிரான்ஸ், ருஷியா,பெல்ஜியம், ஸெர்வியா ஒருபக்கமாகவும், ஜெர்மனி, ஆஸ்திரியா மற்றொருபக்கமாகவும் இருந்துபோர்புரியத்தொடங்கியிருக்கின்றன. இந்த யுத்தத்திற்குக் காரணம் ஆஸ்திரியா ஜெர்மனி தேசங்களே என்று சொல்லத்தகும். ஸெர்வியாவை ஆஸ்திரியாவைக் கொண்டு நிர்ப்பந்தப் படுத்துவது மூலமாய் ஜெர்மனி யுத்த மார்க்கத்தில் செல்லத் துணிந்ததுபோலத் தோன்றுகிறது. சில வருஷங்களாக ஜெர்மனி தேசமானது தரையிலும் கடலிலும் வலிமையுடன் போர் புரியத்தக்க கருவிகளை வெகு செலவின்பேரில் விருத்திசெய்துகொண்டு வந்ததில் அதற்குத் தக்கவாறு தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும்பொருட்டு மற்ற ஐரோப்பிய தேசத்தார்களும் அதிகச்செலவு செய்து அவரவர்களுடைய இராணுவங்களைப் பலப்படுத்திக்கொண்டு வந்தனர்.

*
* *

ஜெர்மனி தேசமானது ஸைந்நியத்தை அதிகரித்தும் அதின் வலிமையைப் பெருக்கியதுமல்லாமல், உலகத்தின்கண் அதின் வியாபாரத்தை விருத்திசெய்து உலக ராஜரீகத்தில் ஒருபிரதான ஸ்தானத்தையும் கைப்பற்றியது; ஆனால் உலக சமாதானத்தைப் பலப்படுத்துவதில் அதினுடைய பலத்தையும் செல்வாக்கையும் உபயோகப் படுத்தாமல் அதினுடைய அதிகாரத்திற்குட்பட்ட ராஜ்ஜியத்தை விரிவாகச் செய்வதிலும் இதர தேசங்களைப் பலஹீனப் படுத்துவதிலும் உலகத்தில் எல்லா தேசங்களைக் காட்டிலும் உன்னதமான ஸ்தானத்தை அடைவதற்கு ஸாதகமாக நியாயத்திற்குஒவ்வாதவழிகளில் நடப்பதிலும் உற்சாகத்துடன் கூடியிருப்பதாக, சென்ற சில வருஷங்களின் சரித்திர ஆராய்ச்சியால் தெரியவருகிறது. ஜெர்மனி ராஜ்ஜிய சக்கிரவர்த்தியும் சமாதான வழிகளில் பற்றுள்ளவரல்ல.

* * *

டென்மார்க்கு தேசத்திலிருந்து ஸ்லெஸ்விக்-ஹால் ஸ்டீன் மாகாணங்களைக் கவர்ந்தும், பிரான்ஸ் தேசத்திலிருந்து ஆல்ஸேஸ்-லோரேன் மாகாணங்களைக் கைப்பற்றியும், ஆபிரிக்கா முதலிய கண்டங்களில் பல பிரதேசங்களைத் தன் ஆளுகைக்கு உட்படுத்தியும், ஐரோப்பிய ராஜதந்திரத்தில் உலக அபிவிருத்தியைக் கவனியாது தன்னுடைய சுயலாபத்திற்கு அனுகுணமாக பல முயற்சிகள் செய்தும், உலக சமாதானத்தினால் விருத்தியாகக் கூடிய உலக நாகரிகத்திற்கு ஒரு தடைபோல் நிற்கத் தொடங்கிற்று.

* * *

இவ்வெண்ணத்தோடு ஆஸ்திரியாவுக்கு தைரியம் கொடுத்து ஸெர்வியாவோடு போர் புரிவதற்குக் காரணமாயிருந்தது மன்றி தனக்கு அயல்தேசங்களான பிரான்ஸ், ருஷியா தேசங்களோடு யுத்தம் செய்ய நோக்கங் கொண்டிருப்பதை வெளிப்படுத்தியும், உலக சமாதானத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று அதி தீவ்ரமாய் முயற்சித்துவந்த ஆங்கிலேய தேசத்தின் வர்த்தைகளை அசட்டை பண்ணியும், பிரான்ஸ்தேசத்தில் திடீரென்று படையெடுப்பதற்காக நிரபராதியான பெல்ஜியம் தேசத்தின் வழியாகப் போர்க் கோலத்தோடு சைந்நியங்களை அனுப்பியும் ஐரோப்பா கண்டத்தை ஒரு ரணகளமாகச் செய்யத் தலைப்பட்டிருக்கின்றது.

ஆகையால் இத்தருணத்தில் சமாதானத்தைப்பலப்படுத்துவதில் ஊக்கத்தோடுகூடியும் தர்மமான யுத்தத்தில் நிர்ப்பந்தத்தின்பேரில் பிரவிர்த்தித்து மிருக்கிற பிரிட்டிஷ் ராஜாங்கம் இப்போரில் வெற்றியடைய இத்தேசத்தார் பிரிட்டிஷ் ராஜ்ய மண்டலத்திற் சேர்ந்த மற்ற தேசங்களைப்போல ஏகோபித்து இக்காலத்தில் இந்த தேசத்தில் யாதொருகுழப்பமுமின்றி ராஜவிசுவாசத்தை பலப்படுத்திஸமாதானத்தைப் பரவச் செய்யவேண்டும்.

***

அதுபோல் இந்தியாவில் உள்ள ராஜாக்களும் பிரபுக்களும் சாமான்யமனிதர்களும் அவர்களால் இச்சமயத்தில் ராஜாங்கத்தாருக்குச் செய்யக் கூடிய கைங்கரியத்தைச் செய்வதில் ஸன்னத்தர்களாக விருப்பதாக வெளியிட்டிருக்கிறார்கள். இந்தியாவின் பிரதம நகர வாஸியாகிய ஸ்ரீமான் தாதாபாய் நவரோஜியென்பவர் இந்தியாவானது இதுவரை பிரிட்டிஷ் ராஜ்பத்திலிருந்து அளவிறந்த நன்மையை அடைந்திருக்கிற தென்றும், இனிமேலும் அவ்விதம் ஏராளமான நன்மையை அடையப் போகிற தென்றும் உலக நாகரிகமே பிரிட்டிஷ் ஜாதியாருக்கு கடன்பட்டிருக்கிறதென்றும், இப்பொழுது தர்மயுத்தத்தில் பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் தலையிட்டிருப்பதால் அவர்களுக்கு இந்தியர்கள் தங்களால் இயன்ற மட்டில் பூரணவுதவி புரிய வேண்டு மென்றும் இன்னும் மற்ற விதமாக ஒரு நிருபம் எழுதியிருக்கிறார்கள்.

***

நமது சபையின் இந்திய, ஆங்கிலேய-இந்திய மெம்பர்கள் பிரிட்டிஷ் இராஜாங்கத்தாரின்பேரில் வைத்திருக்கும் ராஜவிசுவாசத்தை எடுத்துக் காட்டி நமது சபை அக்கிராஸனாதிபதியவர்கள் இந்தியா ராஜப்பிரதிநிதி யவர்களுக்கு தந்தி மூலமாய் அறிவித்தார்கள். அதை ராஜப்பிரதிநிதியும் கவர்னர்ஜெனரலுமாகிய லார்ட் ஹார்டிஞ்ஜ் பிரபு அவர்கள் வந்தனத்துடன் அங்கீகரித்திருக்கின்றனர்.

***

ஜகத் குருவின் நல்வரவினால் உலகத்தில் மனிதர்களுக்குள்ளும் பல ஜாதியார்களுக்குள்ளும் பல தேசத்தார்களுக்குள்ளும் சமாதானம் பரவவேண்டும். அவர் சீக்கிரம் வருவதினால் அச்சமாதான ம

னது அதிகரிக்கவேண்டும். அப்படியிருக்க, இத்தருணத்தில் இம்மகத்தான யுத்தம் ஆரம்பம் செய்யப் பட்டிருப்பது அக்கொள்கைக்கு விபரீதமா என்பது விசாரிக்கத்தக்கது. அதை ஆராய்ந்து பார்த்தல் வேண்டுவது அவசியம். உலகத்தில் கடைசியாக பலஜாதியார்களுக்குள் நடந்த கோரமானயுத்தம்யாதெனில், சென்ற நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் பிரான்சு தேசத்திற்கும் மற்ற ஐரோப்பிய தேசங்களுக்கும் நேர்ந்த நெப்போலியன் என்ற யுத்த வீரன் சம்பந்தமான யுத்தமே. அதற்குப் பிறகு நேர்ந்தயுத்தங்கள் ஐரோப்பியாவிலுள்ள பிரதான தேசங்கள் ஏககாலத்தில் ஒன்று கூடி சம்பந்தப்பட்ட யுத்தங்கள் அல்ல.

* * *

சென்ற நூற்றாண்டின் பிற்காலத்தில் ஜர்மனிதேசத்தின் அபிவிருத்தி மேல்நோக்கி அதினுடைய ராணுவபலம் தரையிலும் கடலிலும் பூர்ணப் பயிற்சியுடன் அதிகரிக்கப்பட்டு வந்ததில் மற்றப் பிரதான ஐரோப்பிய தேசங்களின் ராணுவ பலமானது அதற்குத் தக்கவாறு பலப்படுத்திக் கொண்டுவரப்பட்டது. சில வருஷங்களாக ராணுவபலத்தில் நேரிடும் செலவு ஏராளமாக அதிகரிப்பதைக்கண்டும் அச்செலவை ஜனசமூகங்களின் விவேகாபிவிருத்தி, வியாதி நிவாரணம், தரித்ர நிவிர்த்தி முதலிய விஷயங்களில் செலவு செய்வதால் ஏற்படக்கூடிய நன்மையை ஆலோசித்தும் பல தேசத்தார்களுக்குள் நேரிடும் யுத்தகாரணமான விவகாரங்களை சமாதான முறையாய்த் தீர்த்துக்கொள்ளும் பொருட்டு உலாந்து தேசத்தில் ஹேக் என்னும் இடத்தில் ஒரு நியாய சபை ஏற்படுத்தப்பட்டது. அதில் பலதேசத்து பிரதிநிதிகளும் சேர்ந்திருக்கிறார்கள்.

* * *

மேற்சொல்லியவாறு ஜர்மனிதேசத்தினுடையவும் யுத்தத்தில் பற்றுதல் உள்ள அதின் சக்கிரவர்த்தி அவர்களுடையவும் நோக்கமானது சில வருஷங்களாக யுத்தநெறியைவிட்டு அகலவில்லை. ஆகையால் ஜர்மனி தேசம் யுத்தத்தில் பற்றுதலோடு கூடியிருந்த போதிலும் அந்தக் காரணத்தினால் யுத்தம் நேராமலிருக்கும் பொருட்டு மற்ற ஐரோப்பிய தேசங்களுடையவும் முக்கியமாய் ஆங்கிலேய தேசத்தினுடையவும் ராஜதந்திரமானது பிரயத்தனப்பட்டுக்

கொண்டு வந்தது. இதை நாம் சிலகால ஐரோப்பியவர்த்தமானங்களிலிருந்து அறியலாம். ஆகையால் ஐரோப்பிய சமாதானத்திற்கும் அதின் மூலமாய் உலக சமாதானத்திற்கும் ஜர்மனி தேசத்தினுடைய நிலைமையும் அதின் சக்கிரவர்த்தியினுடைய நோக்கமும் அதின் ராணுவ பலமும் அனுகுணமாயிராமல் பிரதிபந்தகமாயிருந்து வந்தனவென்றே நாம் சொல்லத்துணியலாகும். இவ்வித நிலையில் யுத்தத்தை ராஜதந்திரத்தினால் தடுப்பது அசாத்தியமாயிற்று.

***

யுத்தம் ஆரம்பித்த விதமும் ஜெர்மனிதேசத்தினுடைய மேற்சொல்லிய கருத்தை நன்கு விளக்குகின்றது. அத்தேசமானது யுத்தம் ஆரம்பித்து படையெடுத்த பிறகு பிரான்ஸுடன் யுத்தவிளம்பரம் செய்தும் இருதரப்பாருக்கும் நடுநிலையில் நின்ற பெல்ஜியதேசத்தில் நுழைந்தும் 1870ளு போரில் பாரிஸ்நகரைநோக்கிமுற்றுகை போட்டது போல் யுத்தத்தை ஆரம்பம் செய்தது அவர்களுடைய நகர வாழ்க்கையில் கலகம் செய்ய எத்தனிப்பவனை ராஜாங்கத்தார் அவர்களுடைய அதிகாரிகள் மூலம் அடக்கி பொது சமாதானத்தை பலப்படுத்துவது போல உலக சமாதானத்தைக் குறைவுபடுத்தக் கூடியதும் பலச் செருக்கு அமைந்ததுமான ஜர்மனிதேசத்தை அடக்கினாலொழிய உலக சமாதானம் பாதுகாக்கத் தக்கதில்லையென்று அறிந்து அவ்விதம் அடக்கும் பிரவிர்த்தியை ஆங்கிலேய பிரான்ஸ் பெல்ஜிய ருஷிய தேசங்கள் கைக்கொண்டிருக்கின்றன. அவ்விதம் அடக்குவார்கள் என்பதில் ஐயமில்லை. இதுவரை நிகழ்ந்திருக்கும் வர்த்தமானங்கள் அதையே சூசிப்பிக்கின்றன. ஆகையால் இந்த யுத்தம் முடிந்த பிறகு இதனால் உலகசமாதானம் வெகுகாலம் நிலை நிறுத்தப்படத்தக்கதென்றே நாம் ஊகிக்கலாம். தவிரவும் நவீனபோராயுதங்களைக் கொண்டும் நானாவிதசண்டைக் கப்பல்களைக் கொண்டும் தற்காலக் ககன விமானங்களைக் கொண்டும் இப்போது புரியப்படும் பெரும் போர்போல யுத்தம் இதுவரை நடந்ததில்லை. இப்போரின் முடிவில் இப்போரினால் வியாபாரத்திற்கும் உலக நாகரீகத்திற்கும் உலகாபிவிருத்திக்கும் ஏற்பட்ட இடைஞ்சல் அபரிமிதமென்று நன்கு விளக்கப்படுவதுமல்லாமல் இது போன்ற யுத்தம் ஆரம்பித்தலே மானிடவர்க்கத்திற்கு விரோதமாகச் செய்த

ஒரு பெருங்குற்றமாகு மென்றும் அந்த யுத்தத்திற்கு காரணமான தேசமானது அக்குற்றத்தை செய்ததாகும் என்றும் நன்கு விளங்குமாவதால் இவ்வித யுத்தம் இக்காரணத்தாலே வருங்காலங்களில் நிகழ்வது துர்லபமாகும்.

* * *

தவிரவும் உலகத்திலுள்ள பல தேசத்தார்கள் வியாபாரத்தினும் நாகரிகத்தாலும் அதிவேகத்துடன் செல்லக்கூடிய ஸ்டீமர் ரயில் முதலிய யந்திர சக்திகளாலும் தந்தி மூலமாயும் மத ஆசார வித்தியாஸங்களால் முன் காலங்களில் ஏற்பட்ட துவேஷமானது குறைவுபடுதலாலும் ஒன்று சேர்க்கப்பட்டு வருகின்றனர். ஆகையால் இந்த யுத்தமானது வியாபாரத் தத்தளிப்பையும் இன்னும் பலவித கெடுதிகளையும் யுத்த சம்பந்த மில்லாத தூரதேசங்களிலும் கூட உண்டாக்குகின்றது. ஒரு தேசமானது தற்காலத்தில் மற்றொரு தேசத்தின் சம்பந்தத்தை வர்ஜித்து பிரத்தியேகமாய்நிற்கத் தக்கதில்லை. ஆகையால் இந்த யுத்தத்தின் பாதகங்கள் உலகம் பூராவையும் பீடிப்பதால் இனி மீது இவ்வித யுத்தத்தை தடுப்பதற்கு இந்த அநுபவமே ஒரு காரணமாகும்.

* * *

சண்டைபோன்ற கெடுதியும் சமாதானத்தைப் போலவே விகாச முறையில் ஈசுவரனால் உபயோகப்படுத்தத் தக்கது. ஆகையால் இந்தியாவிலிருக்கும் பிரஹ்மக்ஞானசபை மெம்பர்களின் கடமையாதெனில் யுத்த சமாசாரத்தினால் ஏற்படும் விபரீதமான குழப்பங்களை அவர்களால் இயன்றமட்டில் நிவர்த்திசெய்தும் யுத்தத்திலிருந்து இவ்வுலகம் சீக்கிரம் விடுபடவேண்டுமென்று விரும்பியும் நாம் பிரஜைகளாயிருக்கிற பிரிட்டிஷ் ராஜ்யமண்டலத்திற்கு (Empire) நாம் செய்யவேண்டிய கைங்கர்யங்களை நம்மால் இயன்றமட்டில் செய்யப் பிரயத்னப்படுதலுமாம்.

* * *

இந்த யுத்தத்தினால் பிரிட்டிஷ் ராஜ்ய மண்டலத்திலுள்ளதேசத்தார்கள் அவரவர்களுக்குள்ள வித்தியாஸங்களை மறந்து ஒன்று சேர சமயம் நேர்ந்தது. லார்டு மார்லி, லார்டு மிண்டோ, லார்டு ஹார்டிஞ்ஜ் என்ற பிரபுக்களின் ராஜரீகத்தினால் அந்த ராஜ்ய மண்ட

லத்தில் இந்தியாவுக்குள்ள ஐக்கியமும் விசுவாஸமும் அதிகரித்திருக்கின்றன. இந்த யுத்தம் முடிந்தபிறகு அந்த ராஜ்ய மண்டலத்தில் இந்தியாவுக்குரிய ஸ்தானம் இன்னும் அதிக் கௌரவ முள்ளதாக ஆகுமென்றே நாம் நிதானிக்கலாம்.

***

பாண்டியன் ஜில்லாக்களின் பிரஹ்மக்ஞான சபை (Pandyan District Theosophical Conference) அடுத்த அக்டோபர் மாசம் 24 25 தேதிகளில் அம்பாசமுத்திரம் கல்லிடைக்குறிச்சியில் கூடுகிறது. நமது பிரஹ்மக்ஞான சபை அக்கிராஸனாதிபதியாகிய மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையாரவர்கள் அச்சமயத்தில் அக்கிராஸனம் வகிக்க சம்மதித் திருக்கிறார்கள். அம்பாசமுத்திரம் என்னும் ஊரானது பிரசித்தி பெற்ற பாணதீர்த்தம், பாபநாசம், குற்றாலம் என்னும் அருவிகளுக்குச் சமீபமாயும் மனோஹரமான பிரதேசங்களை அடுத்து மிருக்கிறது. அந்தக் காலத்தில் நமது தமிழ் ஜில்லாக்களிலுள்ள அநேக நண்பர்கள் கூடுவார்களென்று நம்புகிறோம்.

***

இந்து விசுவவித்யாலய (Hindu University) ஸ்தாபகத்தைக் குறித்து இந்தியா கவர்ண்மெண்டார் வெளியிட்டிருக்கிற அபிப்பிராயங்கள் இந்துக்களுடைய கோரிக்கைகளுக்கு ஒத்துமையில்லாதிருத்தலால், அவ்வபிப்பிராயங்களை யுத்தம் முடிந்தபிறகு ஆக்ஷேபிக்க வேண்டுமென்றும் தற்கால நிலைமையில் கவர்ண்மெண்டாரவர்களுக்கு சிரமம் கொடுப்பது உசிதமில்லை என்றும் நமது அக்கிராஸனாதிபதியவர்கள் இந்துவிசுவ வித்யாலயத்தில் அபிமானம் வைத்திருக்கிற பிரஹ்மக்ஞான சபையோர்களுக்கும் மற்றவர்களுக்கும் தெரிவித்தமையால் அவ்விதம் யுத்தம் முடியும்வரை ஆக்ஷேபணைக்கூட்டங்கள் கூடாமல் நின்றிருக்கின்றன.

***

17-8-14. அ. ரங்கஸ்வாமி ஐயர்.

166

வேதாங்கங்கள்.

அங்கம் என்றால் அவயவம். வேதாங்கம் என்பது வேதத்தின் அவயவம். அதாவது வேதங்களைப் படிப்பதற்கும், அறிவதற்கும், அவைகளின் கொள்கைகளை ப்ரயோகிப்பதற்கும் வேண்டிய விதிகளை, விவரமாய் வேதாங்கங்கள் கூறுகின்றன. தவிரவும் பிற் கூறப்படும் அறுவகை வேதாங்கங்கள் வேதங்களையே ஆதாரமாக வுடையவைகளாயும், அவைகளில் உள்ள விசேஷ விதிகள் முன் கூறப்பட்ட வேதங்களையும் ப்ராம்மணங்களையும் ஆதாரமாய்ப் பெற்றவைகளாயு மிருப்பதுடன், பிற்பட்டு ஸம்ஸ்கிருத பாஷையில் இயற்றப்பட்டுள்ள வ்யாகரணங்கள், ஜ்யோதிஷங்கள், கல்ப ஸூத்ரங்கள், நிருக்தங்கள், நிகண்டுகள் முதலான ஒப்பற்ற க்ரந்தங்களுக்கு மூலக்ரந்தங்களாகவும் அமைந்திருக்கின்றன.

கால வரையறையில், ப்ராம்மணங்களுக்கு வெகு காலத்துக்குப் பிறகு வேதாங்கங்கள் இயற்றப்பட்டிருக்க வேண்டும். வேத பாஷையைப் பார்க்கிலும் வேதாங்க பாஷையானது சற்று சுலபமாயும், ஸரஸமாயும் இருக்கின்றது.

ஆறு வேதாங்கங்கள்.

ஶிக்ஷா வ்யாகரண: ச²ந்த:³
நிருக்தம் ஜ்யௌதிஷம் ததா²।
கல்ப: வேதி³ஷடங்கா³நி
வேத³ஸ்யாஹுர்மநீஷிண:

(1) ஶிக்ஷா (எழுத்தியல், உச்சரிப்பு முதலானவைகளைக் கூறும் சாஸ்த்ரம்)

(2) வ்யாகரணம் (இலக்கணம்)

(3) சந்தஸ் (யாப்பியல் அல்லது விருத்தம் முதலானவைகளைப்பற்றிக் கூறும் சாஸ்த்ரம்)

(4) நிருக்தம் (சொல்லியல்)

(5) ஜ்யோதிஷம் (வான நூல் முதலானவை)

(6) கல்பம் (யக்ஞயாகாதிக்ரதுக்களைப் பற்றிக் கூறும் சாஸ்த்ரம்)

குறிப்பு:-இவற்றுள் சிக்ஷையும் சந்தஸ்ஸும் வேதங்களை முறைப்படி வாசிப்பதற்கும் உச்சரிப்பதற்கும், வ்யாகரணமும் நிருக்தமும் அவைகளின் கருத்துக்களை யறிவதற்கும், ஜ்யோதிஷம் என்பது எந்தக்காலத்தில் எந்த விதமான க்ரதுக்கள் செய்யவேண்டுமென்று கால நிர்ணயம் செய்வதற்கும், கல்பம் என்பது, வேதகர்மங்கள் சரியானபடி நடத்தவேண்டிய முறைகளை யறிவதற்கும் அவசியமானவை.

(1) சிக்ஷை. (Phonetics.)

ஶிக்ஷை என்பது ஶிக்ஷ்=கற்றுக்கொள், என்னும் தாதுவிலிருந்து வந்தது. அதாவது கற்பதற்குச் சாதனமான விதிகளைக் கூறும் நூல் என்ற பொருள். சிக்ஷா விதிகள் முன் தைத்திரீய ஆரண்யகத்திலும் தைத்திரீய ப்ராம்மணத்திலும் சேர்ந்திருக்கவேண்டுமென்பது சிலர் அபிப்ராயம்.

ப்ரதிசாகைகள்:-வெகுகாலம் வரை,வேதங்கள் ஒரு சிஷ்யபரம்பரையில் வாக்கால் அத்யயனம் செய்யப்பட்டு வந்தனவே யொழிய, அவைகள் ஏடுகளில் எழுதப்படவில்லை. அவைகளின் ஸ்வரங்களையும் உச்சரிப்புக்களையும் பூர்வாநுஷ்டானக்ரமம் தப்பாது காப்பாற்றுவதற்காகச் சில விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. காலதேச பேதத்தால் ஸ்வரம், முதலானவை பல பேதங்கள் அடைந்தன. ப்ரதிசாகைகள் மேற்கூறிய ஸ்வரம் முதலானவைகளை யறியச் சாதகமாக சில விதிகளைக் கூறுகின்றன. பிற்பட்டு இயற்றப்பட்ட பாணினீயம் முதலான வ்யாகரணங்களுக்கு ப்ரதிசாகையும் மூலக்ரந்தமா யிருக்கின்றது.

2. சாகைகள்:-முன் கூறியவாறு காலதேச பேதத்தால் வேத பாடங்கள் பல பேதங்க ளடைந்தன. வேதங்களின் மொத்தத் தொகுதி ஸம்ஹிதை. ஆனால் ஒவ்வொரு வேதமும் பல பேதங்களை அடைந்தனவாகையால், ஒவ்வொரு பேதத்துக்கும் சாகை என்று பெயர். ரிக்வேதத்துக்குப் பல சாகைகள் இருந்தனவாகிலும், இப்பொழுது ஒன்றுதான் அகப்பட்டிருக்கின்றது. அதுதான் சாகல

சாகை. ஒவ்வொரு சாகைக்கும் ப்ரதி சாகையுண்டு. சாகல சாகையைச் சேர்ந்தது, சௌனகரால் இயற்றப்பட்ட ப்ரதிசாகை. பாணினீயால் இயற்றப்பட்ட சிக்ஷா விதிகள் எல்லா வேதங்களுக்கும் பொதுவாயிருக்கின்றன.

சாகை (கிளை) என்பது மதபேதம். (School) அல்லது வேதத்தின் ஓர் பாகம் என்று சிலர் அபிப்பிராயப்படுவதுண்டு. பாட பேதமென்பதே அதன் உண்மையான கருத்து.

3. சரணம்:—சாகையென்பது பாடபேதம். சரணம் என்பது மதபேதம் (School) முன் சாகை அல்லது பாட பேதத்தை யனுசரித்தே சரணம் அல்லது மதபேதமும் ஏற்பட்டதால் இவ்விருபதங்களும் சில விடங்களில் வித்யாஸ மின்றி உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. "தத்பரி சரணௌ இதரௌவேதௌ" மற்ற இரண்டு (ஸாம யஜுர்) வேதங்களும் அதன் (ரிக்வேதத்தின்) சரணங்கள் பிரிவுகள்) என்ற இடத்தில் சரணம் என்பது பிரிவு எனும் பொருள்பட ப்ரயோகிக்கப்பட்டிருக்கின்றது.

4. பரிஷத் (Academy):—அமரப்படி பரிஷத் என்றால் ஸபை அல்லது கோஷ்டி என்றருத்தம். மனுஸ்மிருதி ப்ரகாரம், பரிஷத் என்பது ஞான சாஸ்த்ரங்கள், புராண இதிஹாஸங்கள், தர்ம சாஸ்த்ரங்கள் முதலான வைகளில் சிறந்த அறிவுடைய 21 ப்ராமணர்கள் சேர்ந்ததாய் இருக்க வேண்டும். ஸந்தேகமான விஷயங்களை ஆராய்ந்து அறிவிக்க அவர்கள் சக்தர்களாகவுமிருக்க வேண்டும். இப்படிப்பட்ட பரிஷத்துக்கள் (Academies) நமது தேசத்தில் பூர்வகாலத்தில் ஆங்காங்கு பல இருந்தன வென்று தோன்றுகின்றது.

"சுவேத கேது பாஞ்சால பரிஷத்துக்குப் போனார்" என்று ப்ருஹதாரண்யகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. வேதாத்யயனம் செய்து அக்னி ஹோத்ராதிகள் சரிவர நடத்திவரும் ப்ராம்மணர்கள் நால்வர் அல்லது மூவர்கள் கூடச் சேர்ந்து ஓர் பரிஷத் ஆகலாம் என்று பராசரர் கூறுகின்றார். குரு சிஷ்யபரம்பரையாய் ஓர் வேத சாகையை அனுஷ்டிக்கும் முறையே சரணம். ஆனால் ஓர்

முக்ய ஸ்தலத்தில் பல வித்வான்கள் சேர்ந்து வேத அத்யயனம், விசாரணை செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டிருப்பதே பரிஷத். ஒரு சரணக்காரர் பல பரிஷத்தைச் சேர்ந்திருக்கலாம். ஒரு பரிஷத்தில் பல சரணக்காரரிருக்கலாம்.

தைத்திரீய உபநிஷத்தில் (I ii i) ஸீக்ஷாம் வ்யாவ்யாஸ்யமா: வர்ண: ஸ்வர: மாத்ராபலம் ஸாம ஸந்தாந: இத்யுக்த: ஸீக்ஷாயா்யாயः ஸீக்ஷை (அல்லது உச்சரிப்பு) சாஸ்த்ரத்தைப் பற்றிக் கூறுவோம். அது, வர்ணம் (அக்ஷரங்கள்) ஸ்வரம் (உதாத்தம், அநுதாத்தம், ஸ்வரிதம்) மாத்ரை (அளபெடை) பலம் (உச்சரிக்கப்போதுமான சக்தி) ஸாமம் (அக்ஷரங்களை ராகத்துடன் உச்சரித்தல், ஸந்தாநம் (தொடர்ச்சி) என அறுவகையாய் விவரிக்கப்பட்டிருக்கின்றது.

2. வ்யாகரணம் (Grammar)

வ்யாகரணம் என்னும் வேதாங்கமானது வேத பாஷையின் இலக்கண விதிகளைப்பற்றிக் கூறுவது. பிற்பட்டு இயற்றப்பட்ட பாணினீயம் என்ற சிறந்த வ்யாகரணத்துக்கு இது மூலக்ரந்தமாய் விளங்குகின்றது. இவ்வகுப்பைச் சேர்ந்ததும், பாணினீயத்துக்கு முற்பட்டதுமான இரண்டு க்ரந்தங்கள் இருக்கின்றன. அவை யாவன, உணாதி (உணாதி) ஸூத்ரங்கள் அதாவது தாதுக்களினின்றும் பெயர்ச் சொற்கள் உண்டாகும் விதிகளடங்கிய நூலொன்றும் ஸ்வரத்தைப்பற்றிக் கூறும் ஸாந்தனுச்சாரியர் ஸூத்ரங்கள், ஆக இரண்டு க்ரந்தங்கள். உணாதி என்பது உண் முதலான தாதுக்களைப் பற்றிய ஸூத்ரங்களென அர்த்தம். உண் என்பது உ என்ற தாதுவைக் குறிக்கும். இதை இயற்றியவர் இன்னாரென்று தெரியவில்லை. ஆதியில் வேத பதங்களுக்கு மாத்திரம் இது இயற்றப்பட்டதாகிலும், பிற்காலத்தில், இன்னும் சில பதங்கள் சேர்த்து விவரமாய் ஸம்ஸ்க்ருத பாஷைக்கும் பாணினீயத்தால் இவ்விதிகள் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன.

3. சந்தஸ் (Prosody.)

வேதங்களின் மாத்ரை (Metres) களைப்பற்றிக் கூறுவது சந்தஸ் என்னும் யாப்பியலாகும். சந்தஸைப்பற்றி ரிக்வேத மந்த்ரங்களிலும் ப்ராம்மணங்களிலும் சில விடங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது.

ஆரண்யகங்களிலும் உபநிஷத்துக்களிலும் சில அத்யாயங்கள் முழுமையும் சந்தஸைப்பற்றியே கூறுகின்றன.

சந்தஸ் என்னும் வேதாங்கத்தைப் பற்றிய புராதன ஆதார நூல் பிங்கள ஸூத்ரம் என்பதே. இது பிங்கள முனிவரால் இயற்றப்பட்டது.

4. நிருக்தம் (Etymology.)

நிருக்தம் என்பது பதங்களின் லக்ஷணங்களைப்பற்றிக் கூறும் சொல்லியல் அல்லது பதவிலக்கணம் என்ற நூலாகும். இதற்கு மூலக்ரந்தங்கள் யாஸ்கர் என்பவரால் இயற்றப்பட்ட நிருக்தமும் அதைச் சேர்ந்த வ்யாக்யானமும். நிகண்டு, நிகமம், தைவதம் என நிருக்தம் மூவகைப்படும்.

நிகண்டு (Synonyms) சொற்களுக்கு அர்த்தங்களைக் கூறுவதே நிகண்டு. யாஸ்கரால் இயற்றப்பட்ட நிருக்தத்தில் முதல் மூன்று அத்யாயங்களும் நிகண்டு என்பதே. அமரம், வைஜயந்தி, ஹலாயுதம் முதலான 10வகை நிகண்டுகள் ப்ரஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

நிகமம் என்றால் வேதம் என்றர்த்தம். இதில் வேதபத லக்ஷணங்களைப் பற்றி விசேஷமாய்க் கூறப்படும். யாஸ்கர் நிருக்தத்தின் 4-வது அத்யாயம் நிகமத்தைப் பற்றி விவரிக்கின்றது.

தைவதம் பூமி, அந்தரிக்ஷம், ஸ்வர்க்கம் என்னும் மூவுலகிலுமுள்ள தேவர்களைப்பற்றி விவரிக்கும் நூல். இது யாஸ்க நிருக்தத்தின் 5-வது அத்யாயத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.

5. ஜ்யோதிஷம் (Astronomy.)

ஜ்யோதிஷம் 5-வது வேதாங்கம். ஜ்யோதி - நக்ஷத்ரம், நக்ஷத்ர சாஸ்த்ரம் என்பது முதற் பொருள். அதாவது வான நூல் எனப்படும் முக்ய சாஸ்த்ரமாகும். முற்காலத்தில் வேதகர்மங்களைக் காலக்ரமம் தவறாது நடத்துவதற்கும் கால நிர்ணயம் செய்வதற்கும் சாதனமாக இந்நூல் உண்டாயிருக்கிறது. நக்ஷத்ரங்களின் நிலைகளையும், க்ரஹ நிலைகளையும் பார்த்து, திதி, வாரம், நக்ஷத்ரம், பக்ஷம், மாஸம், ரிது, அயநம், வர்ஷங்கள் நிர்ணயிக்கும் வகை இந்த

பிரஹ்மக்ஞானமும் நாடகமும்.*

விசேஷமாக ஸாமான்ய ஜனங்களுக்கு மனக்கவர்ச்சியை யுண்டு பண்ணும் விஷயங்களில் நாடகம் முக்கியமானதாகும். நாடகாலங்காரங்களில் தேர்ந்த ரஸக்ஞர்களான உயர்ந்த கவிரத்நங்களால் இயற்றப்பெற்ற சரிதங்கள் நேர்மையாய்மட்டும் நடிக்கப்பெறுமாயின், நம்மால் அளவிடக்கூடாத அவ்வளவு நன்மையைப் பயக்கத்தக்க ஒருவித சக்தி இந்நாடகங்களினின்றும் உண்டாகின்றது. வாலிபர்களுக்குப் பள்ளிக்கூடம் எவ்வாறு பயன்தருமோ? அவ்வாறே வயது முதிர்ந்த நமக்கு நாடகங்கள் பயன்படும். நம் மனத்தில் உயர்ந்த மனோபாவங்களையும், உத்ஸாஹத்தை விருத்திபண்ணக்கூடிய நல்லெண்ணங்களையும் கொள்ளுவதற்கு அநுகூலமாகும்; நல்லெண்ணங்கள் நம் மனத்தை வந்தடைவதற்கு, கண் காதுகளே வழிகளாகும். மேன்மையானதும் பரார்த்தமுமான நோக்கங்களுக்குத் தம்மைத் தியாகம்செய்வதும், தம்முடைய அல்லது பிறருடைய ஆபத்துக் காலங்களில் மனந்தளராது தைர்யத்துடன் நடித்தலும் இத்தகைய இன்னும் அநேக குணாதிசயங்களும் கதாநாயகன் கதாநாயகிகளிடத்து அமைந்திருப்பதையுத்தேசித்து,நாடகத்தைப் பார்ப்பவர்கள் அனைவரும் ஒரே மனத்தினராய் அநுதாபமடைகிறார்கள். அதாவது அன்புபாராட்டுகிறார்கள். அங்கு கூடியிருப்பவர் அனைவரும் ஒரேவித அபிப்பிராயத்தையும் ஒரேவித எண்ணத்தையுங் கொள்ளுகிறார்கள். பல வேறுவகைப்பட்ட ஸாமன்யர்களின் மனோபாவங்களை யெல்லாம் ஒருமைப்படுத்தக்கூடியது இந்நாடகம். ஒரு கூட்டத்தில் 'பாம்பு' என்று ஒருவன் உளறியடித்துக்கொண்டு புறப்பட்டானாயின் எவ்வளவு சீக்கிரம் அக் கூட்டங்களனைத்தும் பயந்து நடுநடுங்கிப் பிரிந்துபோகின்றது; பாருங்கள். அதேமாதிரி தெய்வபக்தி, ராஜபக்தி, தேசாபிமானம், ஸகோதர வாத்ஸல்யம் இத்தகைய நற்குணங்களையும் எல்லோரும் ஒருங்கே தம் மனத்திலுணரும்படி நாம் செய்யக்கூடுமன்றோ! ஆனால் இவ்வித வுணர்ச்சியானது க்ஷணகாலம் மாத்திரம் மனத்தில் தங்கி பின் மறைந்துவிடுகின்றதே எனின், முதலில் மனக்கிளர்ச்சியடைந்தோர் யாவரும் ஏக

*Translation of "Theosophy & Dramatic Art" by Mrs. Annie Besant.

தேசமாவது, மேற்கூறிய நற்குணங்களின் ஒரு சிறு திவலையையா கிலும் தம் சீலத்தில் கொண்டிருக்கிறார்கள் என்பது நன்கு தெரி கின்றது. ஆகவே இன்னுமொரு ஸந்தர்ப்பத்தில் இன்னும் அதிக மான மனக்கிளர்ச்சியைப் பெறுவார்கள் என்பதிற் சந்தேகமில்லை. "ஆருமையுள்ளோர்க் கருள்புரியும்" பிரஹ்மக்ஞான தர்சகம், கலை களைப்பற்றிக் கூறுவதென்னவென்றால், உலகத்தில் அநேக அவலக்ஷ ணமான விஷயங்கள் இருப்பினும், அவைகளை அப்படியே விரித் துக்காட்டுதல். கலை யல்லவென்பதும், அவைகளின் முடிவுப்பய னான உயர் லக்ஷயங்களைப்பற்றியே விவரித்தல்தான் கலையாகும் என் பதுமாம். ஐரோப்பாக்கண்டத்து பாரீஸ் தேசத்திலுதித்த ஸோலா என்பவர் தாம் எழுதியுள்ள நாவல்களில், உலக ஸம்பவங்களில் அவலக்ஷணமானவைகளை யெல்லாம் ஸவிஸ்தாரமாய் விரித்தெழுதி யிருக்கிறார். கலைகளின் லக்ஷணம் அது ஆகாது. ஈசுவராக்ஞைக் குட்பட்டு, தேர்ந்த நுண்ணிய வேலைத்திறத்தோடு ஈசுவரனின் அநேக அம்சங்களில் முக்கியமானதாகிய ஸௌந்தர்யத்தையே விபக்தமாக்கிக்கொண்டிருப்பதுதான் பிரபஞ்ச நியதியின் தர்மம். உலகத்தில் மநுஷ்யர்களும் மற்றைய ஜந்துக்களும் குவித்துவைக் கும் அசுத்தங்களையெல்லாம் சுத்தமாக மாற்றி, விகாரமானவற்றை யெல்லாம் ஸௌந்தர்யங்களாக மாற்றி வருவதே இயற்கையின் தர்ம மாயிருக்கிறது. நம் வீட்டுக் கொல்லைகளில் எங்கேயாவது குப்பை யைக் குவித்திருந்தாலும், அதில் இறைந்து கிடக்கும் தான்யங்களும் விதைகளும் சிலதினங்களுக்கெல்லாம் நன்றாய் முளைத்துத் தளிர்த் துப் பசுமையாகக் காணப்படுகின்றன. கற்பாறைகளில் மேலே யானாலும் மண்மேடுகள் எவ்விதமேனும் ஏற்பட்டிருந்தால் கொஞ்ச நாளுக்கெல்லாம் பசும் புற்றரையாகவும் காட்டுச்செடிகள் நிறைந்த ஒரு மேடையாகவும் அழகான காட்டுப் புஷ்பங்களுடன் பிரகாசிக் கின்றன. நற்கந்தம் வீசுகின்றது. பிரபஞ்சத்தில் அசுத்தமும், விகாரமும், துக்கமுமானவைகளெல்லாம் முடிவில் அதி மேன்மை யான சுத்தத்திற்கும், சௌந்தர்யத்திற்கும், ஸுகத்திற்குமே கார ணமாகின்றன. ஈசுவர ஸ்ருஷ்டி ஒவ்வொன்றிலும் ஒரு பரம இர ஹஸ்யம் அமைந்துளது. கவிகளும், சித்திர வேலைக்காரர்களும், ஸங்கீத விற்பன்னர்களும் அந்தப் பரம இரஹஸ்யத்தை ஒருவாறு

விளக்கக்கூடியவர்கள். அவ்வித நுண்ணிய இரஹஸ்யங்களை நம் போலியர் அறிவதற்கு கலைஞர்களின் உதவி மிகத் தேவையாயிருக்கிறது.

நாடகம் என்பது ஒரு கலாசாஸ்திரம். அதன் விசேஷலக்ஷணமென்னவெனின், மநுஷ்ய ஸ்வபாவத்தையும், மநுஷ்யர்கள் படும் சுகதுக்கங்களையும், நன்றாய் எடுத்துக்காட்டி ஜனங்களின் மநத்தில் பதியவைத்து, துக்கமெல்லாம் இடைநடுவில் ஸம்பவிக்கக் கூடியதென்றும், கடைமுறையில் ஸுகந்தான் வெற்றிபெறக்கூடியதென்றும், ஜநங்களுக்கு உணர்த்தி, அதன் மூலமாய் மநுஷ்யர்களுடைய நற்சிந்தனைகளை விருத்திபெறச்செய்து அவர்களை ஸற்குணசீலர்களாய் வளர்ப்பதேயாம். மேன்மையான நாடகங்களைப் போய்ப் பார்ப்பதால், நம்முடைய சித்தமானது, அற்பமும் இழிவுமான எண்ணங்களையகற்றி, மேன்மையும் சிறப்பும் அமைந்த காரியங்களில் உத்ஸாஹங் கொள்ளும், அதனால் சித்தம் தூய்மைபெறும். மநுஷ்யர்களுடைய வெவ்வேறான ஸ்வபாவங்கள், வெவ்வேறான குணங்களை நாடகத்தின் மூலமாய், நன்றாய் விரித்துக்காட்டி, அதன் வழியாக ஜநாசார சீர்திருத்தத்தின்அவசியத்தையோ, அல்லது இராஜாங்க வியவஹாரங்களின் சீர்திருத்தத்தின் அவசியத்தையோ ஜநங்களின் மநத்தில் வற்புறுத்தி, ஒரு பொது நோக்கத்திற்கு அவர்களை உடன்படச் செய்யலாம். ஸஹோதரபாவமே நிறைந்த உள்ளன்புடைய நூலாசிரியர்களும், நாடகம் நடிப்போர்களும் அன்பு, நீதிமுறை இவைகளின் சாசுவதமான தன்மையையும், துவேஷம், அநீதி இவைகளின் துச்சமான தன்மையையும் தீவிசமான மநோவேகத்துடன் விரித்துரைப்பதனால், பொது ஜநங்கள் இன்னின்ன குணங்களைக் கொள்ளவேண்டும், இன்னின்ன தோஷங்களைத் தள்ளவேண்டும் என நிச்சயம் பெறுவார். ரோமசரித்திரத்தின் மத்திய காலங்களில் (Middle Ages) மடாதிபதிகள், முதலில் பொது ஜனங்களுக்காக வேடிக்கையின் நிமித்தம் நாடகசாலைகளை ஏற்படுத்தி, பின் வரவர அவைகளின் ஸாதகத்தால் நல்ல இலக்ஷியங்களை முன்வைத்து பொது ஜநங்களின் மநோபாவத்தை உயர் நலமமைந்ததாகச் செய்து வந்தார்கள்.

சில வருஷங்களுக்கு முன், புடாபெஸ்டு என்னும் நகரத்தில் வெகு விமரிசையாய் நாடகமொன்று நடைபெற்றுக்கொண்டிருந்

தது. ஒவ்வொரு இரவும் பெருந் திரளான ஜனங்கள் மிக உத்ஸாகத்துடன் கண்ணுற்றுக் களிப்படைந்தனர். அந்நாடகத்தில், புநர்ஜன்மம் என்னும் கொள்கையைப் புகுத்தி, கிறிஸ்தவ வேதத்தில் கூறப்படும் ஆதாம், ஏவாள் என்ற இருவர்களும் பல ஜன்மங்கள் எடுத்து எடுத்து, பிரதி ஜன்மத்திலும் அறிவையும் அநுபவத்தையும் விருத்திபண்ணிக்கொண்டே, கடைமுறையில் எப்படி பூர்ணம் பெற்றார்கள் என்பது நன்றாய் நடிக்கப்பெற்றது. இக்கதையின் கல்பனையால் ஆயிரக்கணக்கான மேனாட்டார்கள் புனர்ஜன்மம் என்னும் தர்மமானது நிச்சயமாக ஸம்பாவிதமே என அறிந்ததுமல்லாமல் ஆத்மாவானது ஒவ்வொரு ஜன்மத்திலும் கொஞ்சங் கொஞ்சமாக விகஸித்து புதிய அநுபவங்களையெல்லாம் பெற்றுத் தேர்ச்சியடைகிறது என்றும் அறிந்தார்கள், இந்நாடகம் கலாசாஸ்திரத்திற்கே ஒரு கௌரவத்தைக் கொடுக்குமாறு அவ்வளவு நன்றாய் நடிக்கப்பெற்றது. பிரஹ்மக்ஞான தர்சநத்தின் உண்மைகளை ஆதாரமாக வைத்து அநேக நல்ல நாடகங்கள் இயற்றுவது உசிதமாகும். ஒருவன் அவனுடைய வாழ்நாட்களின் கர்மபலன்களுக்குத் தக்கவாறு பற்பல ஜந்மங்கள் எடுத்து பற்பல அநுபவங்களையெல்லாம் அடைந்து அந்த வெவ்வேறு ஜன்மங்களில் நாநாவிதமான சமய சந்தர்ப்பங்களையும், நாநாவிதமான தொழில்களையும் கைக்கொண்டு முயற்சித்து, ஒவ்வொரு துறையிலுமாக ஞானம் முதிர்ந்து கடைமுறையில் முக்திமார்க்கத்தில் பிரவேசிப்பதையும் வேறொருவன் வெகு சொற்ப ஜந்மங்களில் தீவ்ரதரமான பிரயத்நத்தால் தீயவைகளைத் தவிர்த்து மஹாத்மாக்களின் கிருபைக்குப் பாத்திரவானாகி சீக்கிரம் முக்திமார்க்கத்தில் பிரவேசிப்பதையும் இணைத்து, ஒரு நேர்மையான சரித்திரம் இயற்றப் பெறுமாயின், அது ஜநங்களின் மநதைக் களிப்புறச் செய்வதோடுமட்டு மல்லாமல் கர்மகதியின் வாஸ்தவமான பலன்களையும்நன்கறிவுறுத்தும். பிரஹ்மக்ஞானதர்சந போதநத்திற்கு நாடகங்களைச் சிறந்த ஸாதநங்களாகக் கொள்ளலாம். புநர் ஜன்மம் போன்ற பிரபஞ்ச தர்மங்களின் மாஹாத்மியத்தை இலகுவாய்க் கற்பிப்பதைத் தவிர மேன்மையான மநோபாவங்களைப் பயக்கத்தக்கதும், உயர் லக்ஷியத்தைக் கொள்ளாது ஆயுளை ஒழுங்கீனமாகக் கழிப்பதின் தீமையை விளக்கக் கூடியதும், அற்பமும்

தீயதுமானவைகளை இகழ்ந்து கூறுவதுமான நாடகங்களும் பிரஹ்மக்ஞானதர்சநத்தின் கருத்துக்களை நிறைவேற்றுவனவாகும்.

நாடகங்களில், நடிகளும் அவர்களுடைய நடை, உடை, பாவனைகளும் அழகு வாய்ந்தனவாகவும், மனோஹரமாகவும் இருத்தல் வேண்டும். ஸீன்கள் முதலியன வெறுமையான ஆச்சரியத்தை மட்டும் விளைவிக்காமல் இயற்கைக்கு ஒத்ததாகவும் இருத்தல்வேண்டும். வீடுகளைச் சுத்தமாய் அழகுற வைத்துக்கொள்ளல், உடைகளை நாகரிகமாக அணிந்துகொள்ளல் இத்தகைய விஷயங்களில் நன்மாதிரியை நாடகங்களில் ஸீன்களின் அலங்காரத்தின் மூலமாய் ஜநங்களுக்குக் கற்பிக்கலாம். அதாவது ஒரு மாளிகையின் ஸீன் காண்பிக்கவேண்டிய ஸந்தர்ப்பத்தில், அம்மாளிகையில் டாம்பீகமான வஸ்துக்கள் நிறைந்திராமல், அழகான சாமான்களும், வெகு உபயோகமுள்ளனவும், நேர்த்தியுள்ளனவுமான சாமான்களே நிறைந்திருப்பன போல் காண்பித்தல் வேண்டும். பாரிஸ் நகரத்து நாடகசாலைகளில் மநுஷ்யனுடைய ரூபம் திடீரென்று கோரரூபங்களாக வெல்லாம் மாறிவிடுவது போல் காண்பிக்கப் படுகிறது. இவைகளைப் பார்த்து, எத்தகைய யந்திர ஸூக்ஷ்மங்களைக் கொண்டு இவ்வற்புதக் காட்சிகள் ஏற்படுகின்றன வென்று ஜநங்களை வியக்கச்செய்வது நாடக லக்ஷணத்திற்கு அநாவசியம். ஆனால், கண்ணுக்கு வெறுப்பை விளைவிக்காமல் இலேசான வர்ணங்களுள்ள உடைகளாலும் நாகரிகமான சிலசொற்ப ஆபரணங்களாலும் நடிகளின் அழகை நன்று வெளிக்காட்டலாம்.

விஷயம் இவ்வாறிருக்க, அக்ரமமான விஷய நுகர்ச்சியில் ஆழ்ந்த விடர்களைக் கதா நாயகர்களாகவுடைய சரித்திரங்களும், அல்லது மனைவியை இழந்த ஒருவனைக் கேலிசெய்யும் சரித்திரங்களும், மிதமிஞ்சிய விகாரமான வேடிக்கைகளும் நடிப்பதற்கு யோக்யமல்ல. இவ்வாறான சரித்திரங்கள் பிரஹ்மக்ஞானஸபையோர்க்கு அங்கீகாரமாகா.

மார்க்கு டுவேயின், பேர்நார்டு ஷா, கில்பேர்ட் ஸல்லிவன் இவர்களுடையது போன்ற ஹாஸ்யரஸம் பொருந்திய வாக் சாதுர்யம் நாடகங்களை மேன்மைப்படுத்தும். ஆனால் காமுகர்களுக்கு உண

வாகக் கூடிய அஸங்கியமான நடைகள் முற்றும் விலக்கபாட வேண்டும்.

மேற்கூறிய விவரங்களை அநுஷ்டானத்திற் கொள்ளுவோமாயின், உயர்ந்த மநோபாவங்களை யில்லாது கீழான காமாதிகளை விருத்தி பண்ணக் கூடிய சரித்திரங்களையியற்றியுள்ள அநேக நாடக கர்த்தாக்கள் தள்ளத் தக்கவரேயாவர். இவர்கள் நாடகங்களின் பாரம்பத்தையே கெடுத்து, விரஸமான, ஒரு வியாபாரலாபத்தை யுத்தேசித்த விஷயமாக்கி விட்டனரன்றோ!

இனி " பரமர் வருங்காலத்தில்" தேவாலயங்களையும், வித்யாசாலைகளையும் போலவே அவ்வளவு மேன்மையுற்றதாகும் நாடகசாலைகளும். பூஜகர்களுக்கும், உபாத்யாயர்களுக்கும் உள்ள கௌரவம் நாடகம் நடிப்பவர்களும் பெறுவார்கள்.

B. S. R. சுப்பிரமணியன்.

நன்மொழி.

நரைமரண மூப்பறியா நல்லவீட்டம் பினரே
நற்குலத்தா ரெனவறியீர் நானிலத்தீர் நீவிர்
வரையிலுயர் குலமென்றுந் தாழ்ந்தகுல மென்றும்
வகுக்கின்றீ ரிருகுலமு மாண்டிடக்காண் கின்றீர்
புரையுறுநங் குலங்களெலாம் புழுக்குலமென் றறிந்தே
புத்தமுத முண்டோங்கும் புனிதகுலம் பெறவே
உரைபெறுமென் றனித்தந்தை வருகின்ற தருண
முற்றறிவ னுற்றிடுவீ ருண்மையுரைத் தேனே.

என் குருநாதன் என்னை ஏன் ஏற்றுக்கொள்ளக் கூடாது?

(105 - ம் பக்கத் தொடர்ச்சி.)

அப்படி அறுந்துபோய்விட்டால் ஜீவனுடைய நிலைமை மிகவும் கஷ்டமானதாகிவிடும். இவ்விதம் சிற்சில சமயங்களிற் சம்பவிப்பதுமுண்டு. பலனைத் தரக்கூடிய தேற்சியை ஜீவன் அடைய வேண்டுமானால் ஜீவாத்மா அதைப் பலமுள்ளதாகச் செய்யவேண்டும். அது அவ்விதம் பலமுள்ளதாகச் செய்யப்படும்போது தனக்கேற்பட்டிருக்கும் பலத்தால் ஜீவாத்மாவுக்குச் சம்பந்தமில்லாத மார்க்கங்களிற் செல்லுகிறது. எங்கே சுயநலம் கருதுதல் இருக்கிறதோ அவ்விடங்களிலெல்லாம் அந்தரங்கத்தில் ஜீவாத்மாவுக்கும் ஜீவனுக்கும் முரண் ஏற்படுவதால் இத்தன்மைய மனிதர்களை உபயோகிக்கக் குருநாதனுக்கு சாத்தியப்படுகிறதில்லை.

கர்வம் அகந்தை ஆகிய இவைகளும் சுயநயத்தைச் சார்ந்தவைகளே. அவைகளும் சக்திகளை வெளிப்பரவவிடாமல் உள்நோக்கியே செல்லும்படி செய்கின்றன. அகந்தையுள்ள மனிதன் பிறர்க்குதவிபுரியச் சந்தர்ப்பங்களைக் கவனிப்பதில்லையாதலால், அக்கொள்கைக் கெதிரிடையானதும், உதவி புரிவதற்கும் கைங்கர்யங்கள் புரிவதற்கும் குருநாதனால் அனுப்பப்படுகிறதுமான உணர்ச்சிகள் தன்னைவந்தடையாமல் தடுத்துவிடுகிறான்.

நாம் அடிக்கடி காண்பதாகிய முன்கோபம், அதாவது சீக்கிரத்தில் கோபங்கொள்ளுந் தன்மை, மற்றொரு தடை. மனச்சஞ்சலமுள்ள மனிதனுடைய மனோமய கோசம் இடைவிடாது அலைக்கப்படுவதுபோல, இம்முன்கோபமுள்ள மனிதன் சூக்ஷ்ம சரீரமும் கலக்கத்தை யடைந்துகொண்டிருக்கும். சாந்தம், சுவஸ்தம் ஆகிய நிலைமைகளி லுள்ளவனுடைய சூக்ஷ்ம சரீரமும் சாதாரணமாக, மேலான மனச்சலனத்துக்குப் பொருத்தமாயுள்ளதும் பிரத்தியேகமானதுமான ஐந்தாறுவித இயக்கங்களை மட்டும்தான் காண்பிக்க வேண்டும். அன்றியும் ஸ்தூல சரீரத்தின் முக்கியபாகங்களாயுள்ள சிலவற்றிற்கு (ஞானேந்திரிய கர்மேந்திரியங்களுக்கு)ச் சம்பந்தப்பட்ட சுழல்கள் (சக்கரங்கள்) மட்டும்தான் இதில் காணப்படவேண்டும். ஆனால் இக்கோபமுள்ள ஒரு மனிதனுடைய சூக்ஷ்ம சரீரத்தில் ஐம்பது அறுபது அல்லது நூறு சிறிய சுழல்கள் காணப்படும்.

அவைகளொவ்வொன்றும் பார்வைக்கு இரணங்கள் போலவும், அவைகளைச் சுற்றிலும் வெறுப்பைக்கொடுக்கக் கூடியதும், விருப்பத்தகாததுமான பலவித வர்ணங்கள் நிறைந்த இடங்களுடன் காணப்படும். இச்சுழல்க ளொவ்வொன்றின் வழியாகவும் அம்மனிதனுடைய சக்திகளெல்லாம் வெளியே போய்விடுவதால் அவன்தான் பலக்குறைவையும் களைப்பையும் அடைவதுமல்லாமல் தன்னைச்சுற்றிலும் ஆரோக்கிய மற்றதும் கலக்கத்தைக் கொடுப்பதுமான சக்திகளையே பரவச்செய்கிறான்.

அவ்வித மனிதனிடம், குருநாதன் வேலையைச் செய்வதற்குச் சக்திகள் ஒன்றுமில்லாமற் போய்விடுகிறது. அவனடைந்திருக்கும் சீர்குலைந்த நிலைமையை தன் சக்தியால் குருநாதன் திருத்தினாலும் கூட அவன் துவாராக அனுப்பப்படும் சக்திகளில் அவனிடமுள்ள கோபகுணம் கலந்து அதைக் கெடுத்துவிடும். மூர்க்கமான அவசரமே மிகுந்திருக்கும் இந்நூற்றாண்டில் ஜீவிப்பவர்களாகிய நமக்குச் சீக்கிரத்தில் கோபங்கொள்ளுதலாகிய இத்தன்மையை நீக்குவது கஷ்டமென்று நான் நன்றாயறிவேன். தற்கால வாழ்நாட்களிலுண்டாகும் அவசரமும் பொறுப்பும் சரீரத்துக்குத் தளர்ச்சியை யுண்டாக்கிவிடுகின்றன. அத்தளர்ச்சியானது இவ்விதக் கெட்டகுணமாகிய கோபமாக வெளிப்படுகிறது. ஜனங்கள் அதிகமான சிரமத்தையடைவதால், உண்மையில் பிரயோஜனமற்ற அற்ப விஷயங்களிலும் கூட அடிக்கடி ரோசத்தை யடைகின்றனர். அவ்விதம் கலக்கத்துக்கு இடம் கொடுக்கக்கூடாது. இவ்வித உணர்ச்சியுள்ள ஒருவன் அவனைப் பிறர் பேசும் வார்த்தைகளினாலாவது பத்திரிகைகளில் அவனைப்பற்றி எழுதப்படும் பொய்க்கட்டுப்பாடான விஷயங்களினாலாவது அதிக சஞ்சலத்தை யடைகிறான். மனச்சமாதானமும் விவேகமுமுள்ள ஒருவனுக்கு இவ்விஷயங்கள் கணப்போதிய மனவருத்தத்தையும்கூட உண்டுபண்ண மாட்டா.

மேலும் அடிக்கடி மனத்தளர்ச்சி யடையும் ஒரு மனிதன் அந்நிலைமையிலிருக்கும்போது ஒரு கார்யத்திற்கும் உபயோகப்படமாட்டான். "திருஷ்டிக்குக் கோசரமாகும் மனிதன் கோசரமாகாத மனிதன்" (Man: Visible and Invisible) என்னும் புத்தகத்தில்

வரையப்பட்டிருக்கும், மனச்சோர்வையடைந்த ஒருமனிதனுடைய சூக்ஷ்மசரீர படத்தைப்பார்த்தால் அவன் தன்னை முற்றிலும் ஒரு கூட்டால் (கவசத்தால்) மூடிக்கொண்டிருப்பதைக் காணலாம். நன்மையைப் பயக்கத்தக்க உணர்ச்சிகள் அவனை வந்தடையாமல் இக்கவசம் தடைசெய்யும். இவ்வுணர்ச்சிகள் அக்கூட்டைத் தகர்க்கும் வலிமையுள்ளதாயினும் அதைப்பிளப்பதால் அக்கூட்டிலுள்ள அசுத்தங்கள் இச்சக்திகளோடு கலந்து இவைகளைக் கெடுத்துவிடும், அன்றியும் அவன் பூண்டிருக்கும் சூக்ஷ்ம கவசத்தை மேற்சொன்னவிதம் முரட்டுத்தனமாய் உடைப்பதால் சில சமயங்களில் அவனுடைய சூக்ஷ்ம தேகமும் தகர்ந்துபோய் மிக்க துன்பத்தை விளைக்கும். மேற்சொன்ன விஷயங்கள் பொருளில் அதிக ஆசையுள்ளவனுக்கும் பொருந்தும். ஆனால் அவன் சூக்ஷ்ம சரீரத்தில் பூண்டிருக்கும் கவசத்தின் நிறம் மட்டும் வித்யாசமாக விருக்கும்.

இம்மார்க்கத்திற் கேற்பட்டிருக்கும் மற்றொரு தடை, பேராசை. ஆனால் இச்சிக்கப்படும் விஷயம் யோக்கியமானதாகவிருந்தால் உலக வியாபாரத்திலுள்ளவனுக்கு அது கூடாதென்று நான் சொல்லவில்லை. ஒரு வக்கிலாவது டாக்டராவது தான் கைக்கொண்டிருக்கும் தொழிலால் மற்றவர்களுக்கு நன்றாக உதவிபுரியும்படி தான் மிகவும் சாமர்த்திய சாலியாக ஆகவேண்டுமென்று நினைப்பது நல்லதேயொழியக் கெட்டதன்று. ஆனால் சதாகாலமும் அதையே நினைத்துக்கொண்டிருப்பவனை அவ்வெண்ணங்கள், நல்ல உணர்ச்சிகள் அவன் மூலமாகவெளிப்பட வொட்டாமல் தடுக்கும். இவ்வித எண்ணத்தைப் பாப மென்று, சொல்லக் கூடாதாயினும், எல்லாச்சரீரங்களிலும் ஒருவிதமான கெட்ட சலனசக்தி தங்குவதற்கு இடங்கொடுப்பதாகவிருக்கிறது. குருநாதன் அவன் மூலமாக அனுப்ப நினைக்கும் சக்திகளின் தன்மைக்கு அது விரோதமாயுள்ளது.

விஷயவாஞ்சை (சிற்றின்ப சுகம்) யானது இம்மார்க்கத்திற்கு முற்றிலும் விரோதமாயுள்ள தடை. அது முழுவதும் துரெண்ணத்தோடு கலந்ததாக விருக்கலாம். அல்லது நாம் தாண்டி வந்திருக்கும் மிருகவர்க்கத்துக்குச் சம்பந்தப்பட்ட உலகத்தின் பழைய வாசனையாக் விருக்கலாம். எப்படியிருந்த போதிலும் இந்த இர

ண்டும் ஒரு தொடர்ந்த சல்லியத்தைக் கொடுத்து அதன் பயனுக ஸூக்ஷ்ம சரீங்களில் உசிதமற்ற சலனங்களை உண்டாக்கி முன் சொன்னவிதம் மேலான உணர்ச்சிகளைத் தடைப்படுத்துகின்றன.

குருநாதனுல் அழைக்கப் படுவதற்குத் தயாராக விருக்கவேண்டுமென விரும்புகிறவர்கள் இத்தடைகளை யெல்லாம் நீக்கிக்கொள்ள வேண்டும். எவ்விதம் தங்களைச் சீர்திருத்திக் கொள்ளுகிறதென்பதைத் தெரிந்துகொள்வது சுலபம். ஆனுல் அந்தப்படி செய்வது கடினம். பிரஹ்மக்ஞானமார்க்கப் புத்தகங்களைச் சாதாரணமாகப் படிப்பது கஷ்டமல்ல. சிறிது முயற்சி யெடுத்துக்கொண்டால் தலங்கள், அதன் உட்பிரிவுகள், ஆகிய இவைகளைப்பற்றியும், வட்டங்கள், கோளங்கள், கிரகசங்கிலிக் கோவைகளாகிய இவைகளைப் பற்றியுமுள்ள ஏராளமான விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம். இதுகூட்டும் போதாது, பின்னைவேண்டிய தென்னவெனில், அனுபவத்தில் கொண்டுவரப்பட வேண்டிய நிலைமை, அதாவது தயவும் விவேகமும் கூடிய ஒரு சாந்த நிலைமை. என்னுடைய செவிலித் தாயொருத்தி யிருந்தாள், அவள் ஏதாவது தவறுதல்கள் ஏற்படும் பொழுதெல்லாம் "அதைப்பற்றிக் கவலைப்படாதே, சுமார் நூறு வருஷம் போனுல் எல்லாம் ஒன்ருகத்தானிருக்கும்," என்று சொல்லுவது வழக்கம்.

இவ்வார்த்தைகளை ஆராய்ந்து பார்த்தால், அது உண்மையென்பது நன்கு புலப்படும். ஏதாவது ஒரு விசனமாவது நோயாவது வந்தால் அந்தச் சமயம் அது மிகவும் கஷ்டமாகத் தோன்றுகிறது. ஆனுல் நீ சுவர்க்கலோகத்தில் சுகானுபவங்களை அடைந்து கொண்டிருக்கும்போது நினைத்துப் பார்த்தால் அவைகளைப்பற்றி என்ன எண்ணுவாய்? ஒருவன் உன்னைப்பற்றி எதையாவது அவதூருகச் சொல்லுகிருன்; ஒரு நூறு வருஷங்கள் கழிந்த பிறகு நீ அதைப்பற்றி நினைப்பாயாயின், உனக்கு அது விஷயமானதாகவே தோன்ருது. இப்போதும்கூட சொல்லுகிறவனைத் தவிர்த்து சொல்லப்படுகிறவனுக்கு அதனுல் ஒரு கெடுதியுமில்லை. அப்படியிருக்கும் போது நீயேன் அதைப்பற்றி உன்னைத் தொல்லைப்படுத்திக்கொள்ள வேண்டும்? ஒருவன்பேரில் யாராவது குறைகூறில் அவன் கோபங்கொள்வது சகஜமாக விருக்கிறது. அது கெட்டவழக்கமே.

இப்பழக்கம் சூக்ஷ்ம சரீரத்திற்குக் குழப்பத்தைக் கொடுக்கிறது. இது மதியீனமான பழக்கம். நீயேன் அவ்வழக்கத்தை அநுசரிக்கவேண்டும்? ஒருவன் பொய்யான வார்த்தைகளையும், பிரியமில்லாத வார்த்தைகளையும் பேசும் துஷ்டனாயிருப்பானாயின் அவன் செய்த தீங்கின் பலனை அவனே அநுபவிக்கிறான். நாமேன் அனாவசியமாக நம்முடைய சூக்ஷ்ம சரீரங்களைக் கலக்கமடையச் செய்து அதனால் துன்பத்தை அனுபவிக்கவேண்டும்?

நாம் மற்றவர்களுக்குச் செய்வதை (நன்மை தீமைகளை) அதிகமாகக் கவனிக்கவேண்டும். ஏனெனில், அவைகள் நம்மை உத்தரவாதிகளாகச் செய்கின்றன. ஆனால் பிறர் நமக்குச் செய்வதைப்பற்றி, அதாவது நமக்கு அந்நியமாயிருந்து வரும் கஷ்ட சுகங்களைப்பற்றிக் காலிபோர்னியா தேசத்து தத்துவ சாஸ்திரி ஒருவர் சொன்னபடி "ஒன்றுமில்லாம லிருப்பது பெரியகாரியம்; அதிகமாயிருப்பது விஷயமன்று" என்று பொறுமையுடன் சொல்லவேண்டும்

பிறர் நம்மைத் தூஷித்தாலும் சரி, பூஜித்தாலுஞ்சரி, அதைப்பற்றி வருத்தத்தையாவது சந்தோஷத்தையாவது சிறிதும் அடையாமல் பிறர்க்குதவி புரியச் சமயத்தை சர்வ ஜாக்கிரதையுடன் எதிர்பார்த்திருக்கவேண்டும். நாம் சர்வத்ர சகோதர பாவம் என்னும் பீடத்தின்மேல் நின்றுகொண்டே எல்லாவற்றையும் நோக்கி அவைகளிலுள்ள நற்குணங்களை மட்டும் கவனிக்கவேண்டும். ஏனெனில், நற்குணங்களை யூன்றிப்பார்ப்பதால் அவைகளையுறுதிப்படுத்தி அதிக நன்மைகளை விளைவிக்கச்செய்யலாம்.

மேற்சொன்ன ஒழுங்குகளின்படி நடக்கிறவன் சீக்கிரத்தில் தேற்சியை யடைவான்; ஏனெனில், நற்கருமங்களைப்புரிய அவனிடம் ஏராளமான சக்திகளிருக்கும். உலகத்திலுள்ள சாதாரண மனிதன் தன் சக்திகளெல்லாவற்றையும் தன்னைப்பற்றிய வுணர்ச்சிகளில் அதாவது கோபங்கொள்ளுதல், மனவருத்தமடைதல், பொறாமைப்படுதல், எரிச்சற்படுதல், பேராசைப்படுதல் முதலியவைகளிற் செலவழித்து விடுகிறான்; ஆகையால் சுயநயமற்ற நற்காரியங்களைச் செய்ய அவனிடம் சக்தி மிச்சமொன்றுமில்லை. எவனொருவன் தன்னை மறக்கிறானோ அவனைத்தான் குருநாதன் தன் ஞாபகத்தில் வைத்துக்கொள்வார். இவ்விதமாகச் சிலவருடங்கள் அவன் உறுதியாகவும் தன்னை மறந்தும் உழைத்து வருவதைக் குருநாதன் பார்க்கிறார்.

(இன்னும் வரும்.)

ஆத்தங்குடி. M. சுவாமிநாதையர்.

அவதாரங்கள்.

(24-ம் பக்கத் தொடர்ச்சி)

2. அவதாரங்களின் உற்பத்தி The Source of Avatars)

இதுவரையில் அவதாரம் என்றால் என்னவென்பதை விசாரித்தோம். இனிமேல் அவதாரங்களின் உற்பத்தியைப் பற்றி விசாரிப்போம். பகவானுடைய அவதாரங்கள் லோகத்தில் நடக்கின்றனவென்று ஒப்புக்கொள்ளுகிற எல்லா மதங்களிலும், திரிமூர்த்திகளுக்குள் இரண்டாவது ஆவிர்ப்பாவந்தான் (Second Manifestation of the Trinity) பகவானுடைய அவதாரத்திற்கு உற்பத்தியென்று ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. கிறிஸ்துவ மதத்திற்குச் சேர்ந்தவர்களும், பகவானுடைய அவதாரம் திரிமூர்த்திகளுக்குள் இரண்டாவது புருஷனிடத்திலிருந்து தான் உற்பத்தியாகிறதென்று ஒப்புக்கொள்ளுகிறார்கள். எல்லாவற்றிற்கும் உற்பத்தி காரணமாகிய ஆதி புருஷனிடத்திலிருந்து (The First Cause), அதாவது பகவானுடைய முதல் ஆவிர்ப்பாவத்திலிருந்து அவதாரம் வெளிப்படுகிறதென்று எந்த கிறிஸ்துவனும் சொல்லமாட்டான். லோகங்களைக் கட்டுவதற்கு வேண்டிய ஸாமக்ரிகளை தயார் பண்ணிக்கொடுக்கிற, பகவானுடைய மூன்றாவது ஆவிர்ப்பாவமாகிய ப்ரஹ்மாவினிடத்திலிருந்து அவதாரம் உண்டாயிற்று என்றும் ஒருவனும் சொல்லமாட்டான். ஆனால் இரண்டாவது ஆவிர்ப்பாவமாகியவிஷ்ணுதான் (God the Son) லோகத்தை உத்தாரணம் பண்ணுவதற்கு மனிதனாக அவதரித்தார் என்று கிறிஸ்துவர்கள்எப்பொழுதும் சொல்வது வழக்கம். ஒவ்வொரு மதஸ்தர்களும் திரிமூர்த்திகளை ஒப்புக்கொள்ளுகிறார்கள். அந்தந்த மதத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட திரிமூர்த்திகளுடைய நாமாக்கள் வெவ்வேறாக விருந்தாலும் அந்தந்த நாமாக்களால் குறிப்பிடப்படுகிற புருஷர்களும், அவர்கள் நடாத்தும் தொழிலும் ஒன்றுதான். அந்தந்த நாமாக்களால் குறிப்பிடப்படுகிற வாஸ்தவகருத்தை நாம் பார்த்துக்கொண்டு போகவேண்டுமேயொழிய, நாமாக்களைப்பற்றிச் சண்டைபோடுவதில் பிரயோஜனமில்லை. திரிமூர்த்திகளில் இரண்டாவதாகிய விஷ்ணுதான் லோகங்களைச் சேர்த்து பிடித்து வைத்துக்கொண்டிருப்பவர். அவரால்தான் லோகங்கள் தரிக்கப்படுகின்றன. தனித்தனியான தேகங்க

ளில் பிராணரூபமாயிருந்துகொண்டு, தேகங்களைத் தரித்து, ஒன்று சேர்த்துப்பிடித்து வைத்துக்கொண்டிருக்கிறார். லோகங்கள் முழுவதையும் ஸமஷ்டியாகப் பார்க்கும்பொழுது, ஜீவன் ரூபமாக விருந்துகொண்டு, அவைகளைத் தாங்கிக் கொண்டிருக்கிறார். (ஜீவன்—The Light of the Logos, or the Fohat). அவரால்தான் லோகங்கள் தாங்கப்படுகின்றன; காப்பாற்றப் படுகின்றன. ப்ரஹ்மாவானவர் பிரகிருதியை அவ்யக்தமான ஸ்திதியிலிருந்து (From the Unmanifested Condition) வ்யக்தமான ஸ்திதிக்குக் (Manifested Condition கொண்டுவந்த போதிலும், அவர் ஏகமாயிருந்த பிரகிருதியை எழுவகைகளாகப் பிரித்தபோதிலும், ஜீவகோடிகளுடைய வாஸத்துக்கு யோக்யமான லோகங்களாகவும் தேகங்களாகவும் விஷ்ணுவால்தான் அந்த பிரகிருதியானது கட்டப்படுகின்றது. ஆகையினால் ஸகல அவதாரங்களும் விஷ்ணுவிடத்தி லிருந்தே வெளிப்படுகின்றனவென்று சொல்லப்படுகின்றது. விஷ்ணு என்ற பெயரைக்கொண்டே, பிரபஞ்சத்தில் எங்கும் வ்யாபிக்கிறவர் என்றும், எல்லாவற்றையும் சேர்த்துப் பிடித்துவைத்துக்கொண்டிருப்பவர் என்றும், எல்லாவற்றையும் தரிக்கிறவர் என்றும், எல்லாவற்றையும் தாங்குகிறவர் என்றும், எல்லாவற்றையும் காப்பாற்றுகிறவர் என்றும், லோகங்களை ரக்ஷிக்கிறவர் என்றும் தெரியவரும்.

திரிமூர்த்திகளாகிய ப்ரஹ்மா, விஷ்ணு, சிவன், அல்லது, மஹாதேவன்—இவர்களுக்குள் நடுவாகிய விஷ்ணுதான் அவதாரங்களுக்கெல்லாம் உற்பத்தியென்று சொல்லப்பட்டிருக்கிறது. மஹாதேவனுடைய அவதாரம் எப்பொழுதாவது நடந்திருப்பதாகத் தெரியவில்லை. ஏதாவது ஓர் ரூபத்தை யெடுத்துக்கொண்டு ஏதாவது காரியம் நடக்கவேண்டிய காலத்தில் இருந்துவிட்டு அந்த அடுத்த நிமிஷத்திலேயே அந்த ரூபத்தை விட்டுவிட்டதாகத் தெரிகிறதேயொழிய, பூமியில் அவதரித்து, புருஷாயுஸ்வரைக்கும் எப்பொழுதாவது நாடகம் போட்டிருப்பதாகத் தெரியவில்லை. அர்ஜுனனுடைய பக்தியையும் தைர்யத்தையும் பரீக்ஷிப்பதற்காக வேடரூபத்தைத்தரித்து அவர் வந்ததாக பாரதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தக்ஷண காரியம் முடிந்ததும், உடனே அந்த ரூபத்தை எறிந்துவிட்டதாகத் தெரிகிறது. ஆகவேண்டிய

காரியம் ஆனதும் ஓர் க்ஷணங்கூட நிற்பதில்லை. அடிக்கடி, மஹாதேவருடைய இப்பேர்ப்பட்ட ஆவிர்ப்பாவங்கள் நேர்ந்திருக்கின்றன. ஒருதடவை ஆதிசங்கரருக்குப்பின் வந்தவர்களில் ஒருவர் தன்னுடைய சிஷ்யர்களை யழைத்துக்கொண்டு காசிக்ஷேத்திரத்திற்கு வந்து கொண்டிருக்கையில், அந்த க்ஷேத்திரத்திற்கு வெளியிலேயே ஓர் சண்டாளனுடைய ரூபத்தைத் தரித்துக்கொண்டு மஹாதேவர் வெளிப்பட்டார். சண்டாளனுடைய ரூபத்தைத் தரித்து புழுதியில் புரண்டுகொண்டிருந்தார். போய்க் கொண்டிருந்த சங்கராசாரியரும் அவருடைய சிஷ்யர்களும் சண்டாளனுடைய ரூபத்தைப் பார்த்துவிட்டு, தூர விலகும்படி அவனைக்கேட்டுக்கொண்டார்கள். அந்த சண்டாளரூபத்தில் விளங்குகின்றபகவானான மஹாதேவரானவர், தலைதெரியாமல் கர்வங்கொண்ட மடாதிபதியை நோக்கி, சிலசில கேள்விகளைக்கேட்டார். அந்த கேள்விகளுக்கு அவரால் பதில் சொல்ல முடியவில்லை. இந்தமாதிரி கர்வங்கொண்ட மடாதிபதியின் கர்வத்தைப் பங்கப்படுத்தி, வணக்கத்தையும் அடக்கத்தையும் உபதேசித்தார். இப்படி அநேக தடவைகளில் மஹாதேவர் காரியார்த்தமாக ரூபங்களைஎடுப்பதுண்டு. ஆனால் இவைகளை நாம் அவதாரங்கள் என்று சொல்வதில்லை. பூமியில் அவதரித்து, ஓர் புருஷாயுஷ்காலம் வரையில் நாடகம் போட்டால் மாத்திரம், அவதாரம் என்று சொல்லலாம். இதே மாதிரிதான் ப்ரஹ்மாவினுடைய விஷயத்திலும். அநேகதடவைகளில் ப்ரஹ்மாவும் வெளிப்பட்டிருக்கிறார். ஏதோ ஓர் க்ஷணத்தில் செய்யப்படவேண்டிய காரியத்தை நிமித்தமாக வைத்துக்கொண்டு அவர் வந்திருப்பதாகத் தெரிகிறதேயொழிய, லோகங்களில் சிலசில மாறுதல்கள் ஏற்படவேண்டியதாயிருந்தாலும் ஸரி, அல்லது சிலசில சீர்திருத்தங்கள் ஏற்படவேண்டியதாயிருந்தாலும் ஸரி, ப்ரஹ்மாவே நேராக வந்து லோகத்தில் நாடகம் போட்டதாகத் தெரியவில்லை. ஆகையினால் ப்ரஹ்மாவினுடைய அவதாரம் யாதொன்றும் நடக்கவில்லையென்றே சொல்லலாம்.

இதற்கு ஒருகாரணமிருக்கலாம். திரிமூர்த்திகளும் ஏன் அவதாரங்களுக்கு உற்பத்தியாயிருக்கக் கூடாது? விஷ்ணுவினிடத்திலிருந்து மாத்திரம் அவதாரங்கள் வெளிப்படுவானேன்? திரிமூர்த்

திகளெல்லாம் வெவ்வேறு புருஷர்களல்லவென்றும், இவர்களெல்லாம் பகவானுடைய மூன்றுவிதமான ஆவிர்ப்பாவங்க ளென்றும் நாம் நன்றாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

மூன்று ஆவிர்ப்பாவங்களுக்கும் மூலமானது ஒரே பொருளே. உதாரணமாக, ஓர் விஷ்ணுபக்தனானவன் சிவபக்தனிடத்தில் த்வேஷம் பாராட்டிக்கொண் டிருக்கிறகாலத்தில், ஹரிக்குமுன் ஒருநாள் அவன் தொழுதுகொண்டிருந்தபொழுது, ஹரியின் விக்ரஹத்தின் முகமானது இரண்டாகப் பிரிந்தது. சிவன் ஒருபக்கத்தில் காணப்பட்டார். விஷ்ணுவானவர் மற்றொருபக்கத்தில் காணப்பட்டார். இரண்டு பேர்களும் ஒருமுகமாகச் சேர்ந்து சிரித்துக்கொண்டு, மஹாதேவனும் விஷ்ணுவும் ஒன்றேயென்று அவனுக்குச் சொன்னார்கள். ஆனால் அவர்களுடைய தொழில்களில் வித்தியாஸம் ஏற்பட்டிருக்கிறது (Difference in their functions). பிரபஞ்ச விஷயத்திலும், ஜீவகோடிகளுக்கு உபகாரம் பண்ணும் விஷயத்திலும், அவர்களுடையதொழில்களில் வித்தியாஸமும் பிரிவும் ஏற்பட்டிருக்கின்றனவேயொழிய; வேறில்லை. ஜீவகோடிகளுக்கு நன்மையைப் பண்ணும் விஷயத்தில் வெவ்வேறு வழிகளில் வேலை செய்கின்றார்கள். நமக்கு இப்படிப்பட்ட பேதபுத்தி ஏற்படுமேயொழிய, அவரிடத்தில் யாதொரு வித்தியாஸமுமில்லை.

அவதாரத்தைப்பற்றி நன்றாய்த் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், பிரபஞ்சத்தைப்பற்றி கொஞ்சம் தெரிந்துகொள்ள வேண்டும். பிரபஞ்சம் என்ற வார்த்தையை இந்தப்ரஹ்மாண்டமாகியசூரியமண்டலத்துக்குத்தான் நான் உபயோகப் படுத்துகின்றேன். இந்த சூரியமண்டலம் மாதிரி ஜகத்தில்அநேகாயிரம் சூரிய மண்டலங்கள் கணக்கில்லாமலிருக்கின்றன. அவைகளில் ஒவ்வொரு சூரியமண்டலமும் ஒவ்வொரு ப்ரஹ்மாண்டமே. எப்படி நமது சூரியமண்டலத்திலுள்ள க்ரஹமண்டலங்களெல்லாம் சூரியன் என்ற நக்ஷத்ரத்தைச் சுற்றிக்கொண்டிருக்கின்றனவோ, அதேமாதிரி, நம்முடைய சூரியமண்டலம் போன்ற அநேக சூரிய மண்டலங்கள் சேர்ந்து மற்றொரு பெரிய நக்ஷத்ரமாகிய சூரிய மண்டலத்தைச் சுற்றிக்கொண்டிருக்கின்றன.

(இன்னும் வரும்.)

கோடீசுவர ஐயர்.

சமாசாரங்கள்.

பிரஹ்மக்ஞானசபையின்பிரெஸிடெண்டான மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையாரவர்களுக்கு இருக்கும் வேலைத்தொந்தரவு இவ்வளவுஎன்று சொல்லி முடியாது. இருந்தபோதிலும் சபையோர்கள் அங்கங்கேகூடும்கூட்டங்களுக்கு வரவேண்டுமென்று வேண்டிக்கொண்டால் அன்புடன் அங்கீகரித்து ஆதரிக்கிறார்கள். சென்ற ஜூலைமீ இங்கிலாந்திலிருந்து திரும்பி வந்தவுடன் நிஜாம் இராஜ்ஜியத்திலுள்ள கிளைச்சபைகள் கூடிய கூட்டத்தில் அக்கிராஸனம் வகித்தார்கள். அவர்களுடைய வரவை அந்த ராஜ்ஜியத்திலுள்ளவர்கள் மிகக்கொண்டாடினார்கள். சென்ற ஆகஸ்டுமீ த்தில் பல்லாரியில் நடந்த கான்பரன்ஸில் அக்கிராஸனம் வகித்தார்கள். இம்மாதத்தில் ஐக்கிய மாகாணங்களிலுள்ள கிளைச்சபைகள் கான்பூரில் கூடும் கான்பரன்ஸிலும், அக்டோபர்மீ த்தில் தென் இந்தியாவிலுள்ள கிளைச்சபைகள் திருநெல்வெலி ஜில்லா அம்பாசமுத்திரம் கல்லிடைக்குறிச்சியில்கூடும் கான்பரன்ஸிலும் அக்கிராஸனம்வகித்துநடத்துவதாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

"மத்திய ஜில்லாக்களின் பிரஹ்மக்ஞான ஸபையின் 13-வது வருஷ பீடரேஷன் மகோற்சவம்"–ஷெமீட்டிங்கு சென்றமீ 22, 23௳களில் பல்லாரியில், மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையவர்களின் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. கடப்பை,கர்நூல்,அனந்தபுரம்,நெல்லூர், புரொத்தட்டூர், மதனபள்ளி, ஹாஸ்பேட், பங்களூர், மைசூர், ஆதோனி முதலிய பலஸபைகளிலிருந்து சுமார் 120 மெம்பர்கள் வந்திருந்தார்கள். 22௳யன்று மாலை 4½மணிக்கு பல்லாரிடவுன் ஹாலில் மாதுஸ்ரீ பெஸண்ட் அம்மையவர்களுக்கு ஓர் நல்வரவு பத்திரம் (Welcome address) வாசிக்கப்பெற்றது. 5-மணிமுதல் 6-மணிவரை ஸம்பாஷணை மீட்டிங்கு நடந்ததில், அம்மையாரவர்கள் பல கேள்விகளுக்கு தெளிவாயும் விரிவாயும் உத்தரமளித்தார்கள். பின்பு 7மணியானதும், அம்மையார் "பிரஹ்மக்ஞாந ஸபையால் மேனாட்டுக்கும் கீழ் நாட்டுக்கும் ஏற்பட்ட பயன் என்றவிஷயமாக ஓர்மஹோபந்யாஸம்செய்தார்கள். அச்சமயம் ஜில்லா கலெக்டர்துரையவர்களும், ஜில்லா மெடிக்கல் ஆபீசர்வர்களும் இன்னும் பல பிரமுகர்களும் வந்திருந்தார்கள். ஸிக்கந்த்ராபாத் ஸிவில்ஜட்ஜ் மகா-ா-ா. ஸ்ரீ V. V. S. அவதாநி அவர்கள் " மஹாத்மாக்களும் அவர்களின் கைங்கர்யமும் " என்ற விஷயமாக தெலுங்கில் விரிவாய் ஓர் உபந்யாஸம் செய்தார்கள். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலையில் பிரஹ்மக்ஞான ஸபையின் கட்டிடத்தில் ஈ- எஸ். மீட்டிங்கு நடந்தது. மாலையில் ஓர் ஸம்பாஷணைமீட்டிங்கு நடந்த பின்னர், அம்மாளவர்கள் 'லோககுருவின் அவதாரம்' என்ற விஷயத்தைப் பற்றி டவுன் ஹாலில் ஓர் பெரும் உபந்யாஸம் செய்தார்கள். அச்சமயம், ஜில்லா ஜட்ஜ் (Mr Smith) துரையவர்களும்,(Mrs Smith) அவர்களும் உள்பட, ஹாலில் எல்லாப் பக்கத்திலும் ஜனங்கள் நிறைந்திருந்தார்கள். உபந்யாஸ

முடிவில் அம்மாளவர்கள், "மேனுட்டில் தற்சமயம் நடக்கும் யுத்தமானது, மஹாத்மாவின் அவதாரகாலத்தைத் துரிதப் படுத்துகிற தாகின்றது" என்று கூறி முடித்தார்கள். இவைதவிர, அம்மாளவர்கள், ஸ்திரீகளுக்குப் பிரத்தியேகமாய் "ஸ்திரீதர்மம்" என்பதைப்பற்றி உபந்யஸித்தார்கள். Bro. C. ராமையா அவர்கள் "ஸன்மார்க்க நெறி" யைப்பற்றி தெலுங்கில் பிரசங்கம்செய்தார்கள். 24வ திங்கட்கிழமை யன்று பிரஹ்மக்ஞாந ஸபையில் 13 நூதன மெம்பர்கள் சேர்ந்தார்கள். மஹாத்மாக்களின் அநுக்கிரஹத்தால் எல்லாம் நன்குமுடிந்தது. அடுத்தவருஷம் பீடரேஷன் கர்நூலில் நடைபெறும்.

(எல். சுப்பிரமணிய ஐயர்,.)

தென் ஆப்பிரிக்காவில் நம்முடைய தேசத்திலிருந்து போய் குடியேறியிருந்த இந்தியர்கள் பட்ட கஷ்டங்களை நிவிருத்திச்சும்பொருட்டு ஸ்ரீமான் கந்தி என்பவர் தன்னுடைய உத்தியோகம் ஸம்பாத்தியங்களை எல்லாம் விட்டு அந்த இராஜாங்கத்தாருடன் மன்றாடி, சிறைச்சாலையில் அடைபட்டு பலவருஷங்களாக பிரயாசைப்பட்டு அந்த ஜனங்களை கஷ்டத்திலிருந்து விடுவித்தார். அந்த மஹா புருஷன் தென் ஆப்பிரிக்காவில் விட்டுப் புறப்பட்டு நம்முடைய தேசத்துக்கு வந்து கொண்டிருக்கிறார். இங்கே வந்தவுடன் மேலே சொன்ன ஸெர்வண்ட்ஸ் ஆப் இந்தியா ஸொஸைடியில் சேர்ந்து ஸ்ரீமான் கோபால கிருஷ்ண கோகலே அவர்களுடன் நம்முடைய தேசநன்மைக்கு உழைப்பதாக தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது.

இங்கிலாந்து தேசத்துப் பிரதான நகரமாகிய லண்டனில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் வான சாஸ்திரிகளின் சபைக்கு (The London Astronomical Society) அக்கிராசனாதிபதி யாகிய ப்ரொபெஸர் பிக்கர்டன் (Porfessor Bickerton) என்பவர் ஆகல்டு கிளப் (Occult Club) என்னுமிடத்தில், செவ்வாய்என்னும் ஓர் உலகத்தைப்பற்றி உபந்நியஸித்ததில் நவக்கிரகங்களில் ஒன்றாகிய அவ்வுலகத்திலும் ஜீவகோடிகளிருப்பதாயும், அங்குள்ளவர்கள் நம்மைக்காட்டிலும் அதிக உயர்நல மமைந்தவர்களென்றும், கூடிய சீக்கிரம் அவ்வுலகத்தவர்கட்கும் நம்முலகத்தவர் கட்கும் போக்குவரவு முதலியவை ஏற்படப்போகிறதென்றும் தெரிவித்தனராம். அவ்வுலகத்தவர்கள் யாதொரு வித்தியாசமுமின்றி ஒரே குடும்பத்தவர்கள்போல் ஒற்றுமையுடன் வாழ்கின்றனராம்.

இப்போது உலகத்திலிருக்கும் பௌதிக சாஸ்திரிகளுக்குள் (Scientists) Sir Oliver Lodge என்பவர் மிகவும் கீர்த்திபெற்றவர். அவர் சென்றமேமீ 17வ ஞாயிற்றுக்கிழமை Stradford Road Baptist Church என்னுமிடத்தில் "வாழ்வின் விசாலம்" என்னும் விஷயத்தைப் பிரஸங்கித்த போது

"சிருஷ்டியில் மனிதனுக்கு மேலான ஜீவன் கிடையாதென்று சொல்வது அறிவின்மையென்றும், எப்படி மனிதனுக்குக்கீழே படிப்படியாய் அநேகம் ஜீவகோடிக ளிருக்கின்றனவோ அவ்விதமே மனிதனுக்குமேலும் அநேகம் ஜீவகோடிகளிருக்கின்றன வென்றும், அவர்கள் நம்முடைய கண்களுக்குப் புலப்படாவிட்டாலும், இப்பிரபஞ்ச சம்பந்தமாய் அவரவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் தொழில்களை முறையேசெய்துவருகிறார்களென்றும்" மொழிந்தனராம்.

கல்கத்தா கவர்ன்மெண்டு காலேஜ் ப்ரொபெசர் ஸ்ரீமான் ஜகதீச சந்திர போஸ் என்னும் நம்முடைய இந்திய சகோதரர், இங்கிலாந்தில் ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலையின் பௌதிக சாஸ்திரிகளில் சிறந்த ஒருவரால் அழைக்கப்பட்டு, சென்ற மேமீ 20உ அங்கேகூடியிருந்த வித்வத்சபையில் "பிராணன்ஒன்றே" என்ற விஷயத்தை நன்கே உபந்நியஸித்ததுமன்றி, அவ்விஷயத்தை ஸ்தூல திருஷ்டிக்குத்தெரிய, ஸ்தாவர ஜங்கமங்களிலும், மனிதர்களிலும் உள்ள பிராணனுக்கு வித்தியாஸமில்லை யென்பதை சில யந்திரங்களைக்கொண்டே பிரத்தியக்ஷமாகக் காட்டினராம். இதைப் பார்க்கவந்த பிரான்சு, அமெரிக்கா, ஜெர்மெனி முதலிய அநேக தேசத்தவர்கள் அச்சீமானை அவரவர்கள் தேசங்களில் வந்து உபந்நியஸிக்க அழைத்தனராம். மற்றதேசங்கள்போல் நம் தேசங்களிலும் சௌகரியங்கள்மட்டும் ஏற்படுமானால் நம்மவர்கள் அநேக அற்புதங்களைச் செய்வார்களென்பதில் என்ன சந்தேகம்?

கொஞ்சகாலமாக தேங்காய்விலை சுமார் இரண்டுபங்காய்விட்டது. அதன் காரணமிதுவரை நாம் தெரிந்துகொள்ளவில்லை. மாம்ஸத்தைக் காட்டிலும் தேங்காயில் அதிக மஸ்து இருக்கிறதாக ஐரோப்பியர்கள் கண்டுபிடித்து அதிக விலையைக் கொடுத்தாவது இவ்விடமிருக்கும்தேங்காய்களை அவர்களே கொண்டுபோகிறார்கள். 1900வருஷத்தில் 1675000ரூக்கு தேங்காய் ஏற்றுமதி. 1913வருஷத்தில் 15545000ரூக்கு தேங்காய் ஏற்றுமதி. ஆகவே 14வருஷங்களுக்குள் 10பங்கு அதிகமாகிவிட்டது. இவ்விதமே ஏற்றுமதியாகுமானால் சொற்பகாலத்தில் தேங்காயே நமக்குக் கிடையாமற் போகுமென்பதில் என்ன சந்தேகம்?